# யூன்– 12 – செவ்வாய்

## புனித ஜோன் பக்குந்தோ

## ஆண்டவர் என்னைத்தம் அன்பனாகத் தேர்ந்தெடுத்துள்ளார்: திபா. 4:3

## முதல் வாசகம் : 1 அரசர் 17 : 7 – 16

அந்நாட்களில் நாட்டில் மழை பெய்யாத காரணத்தால் சில நாள்களில் அந்த ஓடையும் வற்றிப்போனது.அப்பொழுது ஆண்டவரது வாக்கு எலியாவுக்கு வந்தது."நீ புறப்பட்டுச் சீதோன் பகுதியிலிருக்கும் சாரிபாத்துக்குப் போய் அங்கே தங்கியிரு. அங்கு உனக்கு உணவு அளிக்குமாறு ஒரு கைம்பெண்ணுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்".எலியா புறப்பட்டு, சாரிபாத்துக்குப் போனார். நகரின் நுழைவாயிலை வந்தடைந்தபொழுது, அங்கே ஒரு கைம்பெண் சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார். அவர் அவரை அழைத்து, "ஒருபாத்திரத்தில் எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா" என்றார்.அவர் அதைக் கொண்டு வரச்செல்கையில், அவரைக்கூப்பிட்டு, "எனக்குக் கொஞ்சம் அப்பமும் கையோடு கொண்டுவருவாயா?" என்றார்.அவர், "வாழும் உம்கடவுளாகிய ஆண்டவர்மேல் ஆணை! என்னிடம் அப்பம் ஏதும் இல்லை. பானையில் கையளவு மாவும் கலயத்தில் சிறிதளவு எண்ணெயுமே என்னிடம் உள்ளன. இதோ, இப்போது இரண்டொரு சுள்ளிகளைப் பொறுக்கிக்கொண்டு வீட்டிற்குப்போய் அப்பம் சுட்டு, நானும் என்மகனும் சாப்பிடுவோம். அதன்பின் சாகத்தான் வேண்டும்" என்றார்.எலியா அவரிடம், "அஞ்ச வேண்டாம், போய் நீ சொன்னபடியே செய். ஆனால், முதலில் எனக்கு ஒரு சிறிய அப்பம் சுட்டுக் கொண்டுவா. பிறகு உனக்கும் உன்மகனுக்கும் சுட்டுக்கொள்.இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் உரைப்பது இதுவே. நாட்டில் ஆண்டவர் மழை பெய்யச்செய்யும் நாள்வரை பானையிலுள்ள மாவு தீராது. கலயத்திலுள்ள எண்ணெயும் குறையாது" என்று சொன்னார்.அவர் போய் எலியா சொன்னபடியே செய்தார். அவரும் அவருடைய மகனும், அவர்வீட்டாரும் பலநாள் சாப்பிட்டனர்.எலியா வழியாக ஆண்டவர் உரைத்த வாக்கின்படி பானையிலிருந்து மாவு தீரவில்லை. கலயத்திலிருந்த எண்ணெயும் குறையவில்லை.

**பதில்பாடல் :** ஆண்டவரே எங்கள் மீது உமது முக ஒளி வீசச் செய்யும்.

## நற்செய்தி : மத்தேயு 5 : 13 – 16

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது: நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும் வேறு ஒன்றுக்கும் உதவாது.நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது.எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்பொழுதுதான் அது வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும்.இவ்வாறே உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்" என்றார்.

**தியானம்:** உப்பு, உவர்ப்பு தன்மையும் ஒளிஒளிர்விக்கும் தன்மையும் கொண்டது. தன்னுடைய குணத்தை செயல்படுத்துவதில் உப்பும், ஒளியும் ஒன்றுக்கொன்று ஈடு இணையானது. உப்பு இருந்த இடத்தில் இருந்து கொண்டு அது எவ்வளவு கடினமான இடமாக இருந்தாலும் தன்னைக் கரைத்து கசியவைத்து, தன் உவர்ப்புத் தன்மையை உட்புகுத்திவிடும். அது போல் ஒளியும் தன் ஒளியும் தன் ஒளிக் கதிரை ஊடகங்கள் வழியாக ஒளி ஊடுறுவல், ஒளி விலகல் ஒளிமுறிவு, ஒளிச்சிறதல், ஒளிபிரதிபலித்தல். இப்படி எப்படியாவது தன் தாக்கத்தை ஏற்படுத்திவிடும். நீங்கள் உப்பு, நீங்கள் ஒளி, உங்கள் தாக்கத்தை நீங்கள் வாழும் சமுகத்தில் ஏற்படுத்துங்கள். கிறிஸ்தவன் தனக்கென ஒரு தனி தன்மைகொண்டு உப்பாகவும் ஒளியாகவும் செயல்பட அழைக்கப்படுகின்றான். உப்பைப்போல ஒளியைப் போலதன் நிலையில் திருப்தி அடையவேண்டும் நான் உவர்ப்பாக அல்லவா இருக்கின்றேன் என்றோ அல்லது நான் வெப்பமாக அல்லவா இருக்கின்றேன் என்று விரக்தியோ வேதனையோ அடையக்கூடாது. பாகற்காய் கசப்பாக இருப்பதில் தான் அதன் பெருமை, மாம்பழம் இனிமையாக இருப்பதுதான் அதன் சிறப்பு, இருப்பதில் திருப்தி அடைந்து நம்மிடம் உள்ள நல்லபண்புகளை நாம் வாழும் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்தி வாழமுயற்சிசெய்வோம் ஆமென்.